டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.03.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 223 - Madurai | Online Edition

# சென்னையில் மழை பெய்ய வாய்ப்பு! வானிலை ஆய்வு மையம் தகவல்!!

சென்னை, மார்ச் 18

சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று (18.3.26) வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னையில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், உள் தமிழகத்தில் வறண்ட வானிலையே நிலவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா முதல் தெற்கு உள் கர்நாடகா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

20 மற்றும் 21ம் தேதி கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக் கூடும். 22ம் தேதி லேசான மழை பெய்யக்கூடும்.

23 மற்றும் 24ம் தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்வடும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இட மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை மையம் சார்பாக 12வது விதை கருத்தரங்கு

கோயம்புத்தூர், மார்ச் 18

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விதை மையம் சார்பாக, 12வது விதை கருத்தரங்கு 17.03.26 அன்று விதை மையத்தில் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில், 85-க்கும் மேற்பட்ட வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு 2026-27 ஆம் ஆண்டிற்கான விதை உற்பத்தி திட்டத்தை வரையரை செய்தார்கள்.




இந்த கருத்தரங்கில், விதை மைய இயக்குநர் முனைவர் ர.உமாராணி வரவேற்புரை வழங்கி, 2025-26 ஆம் ஆண்டில் விதை உற்பத்தியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சாதனைகளை விரிவாக கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரும் மற்றும் பொறுப்புத் துணைவேந்தருமான முனைவர் கா.சுப்ர மணியன், விதை மையத்தில் அமைந்துள்ள விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் பொன்விழா கண்காட்சியைத் திறந்து வைத்தார். கல்வி, ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் விதை உற்பத்தி ஆகியவற்றில் விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் கடந்த 50 ஆண்டுகளாகப் படைத்து வரும் சிறப்பான பயணத்தின் முக்கிய மைல்கல்லை இக்கண்காட்சி காட்சிப்படுத்துகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் பொறுப்புத் துணைவேந்தர் 12வது விதை கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இக்கருத்தரங்கில் பேசிய அவர் தரமான விதைகள் பயிர் விளைச்சலை 20 முதல் 25 சதவீதம் வரை அதிகரிக்கின்றன என்பதை வலியுறுத்தினார்.

எனவே, நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தரமான விதைகளே அடிப்படை என்பதை சுட்டிக்காட்டினார். தமிழக விவசாயிகளிடையே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் இரகங்களுக்குப் பெரும் வரவேற்பும் தேவையும் உள்ளதையும் எடுத்துரைத்தார். தற்போது 40 வகையான பயிர்கள் மற்றும் 175 இரகங்களில் 1800 டன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. உயர்தர விதைகளுக்கான விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், 2026-27 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை உற்பத்தியை இருமடங்காக்கி, 3500 டன் விதைகள் உற்பத்தி செய்ய நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குநர் முனைவர் இரா.ரவிகேசவன், புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் சிறப்பியல்புகள், பயிர் உற்பத்தித்திறன் மற்றும் விதை மகசூலில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம், விதை விநியோகச் சங்கிலியில் கரு மற்றும் வல்லுநர் விதைகளின் இனத்தூய்மை பராமரிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய முதல்வர் முனைவர் கே.வெங்கடேசன், விதைகளைச் சேமித்து வைக்கும்போது அவற்றின் முளைப்புத்திறனைப் (எயைணுடைவைல) பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

மேலும், தமிழகத்தில் 21,000 எக்டர் பரப்பளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் காய்கறி விதை இரங்களைப் பயன்படுத்தி பயிர் சாகுபடி நடைபெற்று வருவதையும் குறிப்பிட்டார். இறுதியாக, விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வே.மனோன்மணி நன்றியுரை கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விதை செயலாக்க மையத்தில் RAWE செயல்பாடு – டிஎஸ்யூ வேளாண்மை மாணவர்கள் பங்கேற்பு

திருச்சி, மார்ச் 18

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூரில் அமைந்துள்ள விதை செயலாக்க மையத்தில், தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக் கழகத்தின் வேளாண்மைத் துறையில் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்பாடுகளில் ஈடுபட்டனர்.



இந்த RAWE நடவடிக்கையின் போது, மாணவர்கள் விதைகள் சேகரிப்பு, சுத்திகரிப்பு, உலர்த்தல், தரத் தேர்வு மற்றும் சேமிப்பு போன்ற செயல்முறைகளை நேரடியாகக் கற்றறிந்தனர். மேலும், விதைகளின் தரத்தை உறுதிப்படுத்தும் நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடு குறித்தும் விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. மைய நிபுணர்கள், உயர்தரமான விதைகள் தயாரிப்பின் அவசியம், சரியான விதைத் தேர்வு மற்றும் செயலாக்க முறைகள் விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் விதம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர். இந்த RAWE செயல்பாடு, மாணவர்களுக்கு விதை தொழில் நுட்பம் தொடர்பான நடைமுறை அறிவை வழங்கியதோடு, தொழில்முறை திறன்களை மேம்படுத்த உதவியாக அமைந்தது. மாணவர்கள் இந்த அனுபவத்தை பயனுள்ளதாகக் கருதி, மைய நிர்வாகத்தினருக்கு தங்களது நன்றியை தெரிவித்தனர்.



# கூடுதல் விலைக்கு உரம் விற்றால் குற்றவியல் வழக்கு

## வேளாண்மை இணை இயக்குநர் கடும் எச்சரிக்கை

திருச்சிராப்பள்ளி, மார்ச் 18

நடப்பு பருவத்தில் பயிர் சாகுபடி மேற்கொள்ளாத நபர்களுக்கு உரம் விற்பனை செய்தால் உரக் கட்டுப்பாட்டு சட்டத்தை மீறியதற்காக உர விற்பனை உரிமம் ரத்து செய்யப்படும் என திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், திருச்சிராப்பள்ளி மாவட்ட உர விற்பனையாளர்கள் ஆதார் அட்டையுடன் வரும் விவசாயிகளுக்கு மட்டுமே உரம் விற்பனை செய்ய வேண்டும்.

மீறினால் உர கட்டுப்பாட்டு ஆணை 1985-ன்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தற்போது நெல், நிலக்கடலைமற்றும் வாழை சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் யூரியா, டிஏபி, பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மொத்த உர விற்பனை யாளர்கள் வெளிமாவட்டங்களுக்கு உரங்களை மாற்றம் செய்திடவும், விற்பனை செய்திடவும் கூடாது. மேலும் உரங்களை வெளிமாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யவும் கூடாது என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சில்லறை உர விற்பனையாளர்களுக்கு அனுப்பும் பொழுது உரிய விலை பட்டியல்கள் மற்றும் ஆவணத்துடன் உரங்களை வாகனங்களில் அனுப்ப வேண்டும். சில்லறை உர விற்பனை யாளர்கள் விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யும் பொழுது கட்டாயமாக ஆதார் அட்டையைக் கொண்டு கைரேகையை பதிவு செய்து உரம் விற்பனை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளின் தேவைக்கு மேல் அதிகமாக உரம் வழங்க கூடாது. ஒரே நபருக்கு அதிக அளவு உரம் வழங்கக் கூடாது. குறிப்பிட்ட விவசாயிகளின் பெயரில் அதிகப்படியாக உர விற்பனை நடைபெற்றது கண்டறியப்பட்டால் சில்லரை விற்பனை உரிமம் எந்த முன் அறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

விவசாயம் மேற்கொள்ளாத நபர்களுக்கு உரம் விற்பனை செய்யக்கூடாது. உரங்களின் இருப்பு மற்றும் விலை விவரங்களை தகவல் பலகையில் தினசரி பராமரிக்க வேண்டும். மொத்த விற்பனையாளர்களிடம் சில்லரை விற்பனையாளர்கள் உரங்களை வாங்கும் போது, அதற்குரிய ஓ-படிவம் பெற்று இருப்பதுடன், உரத்திற்கான விலைப்பட்டியலுடன் பெறப்பட்டு, இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

தினசரி PSO கருவி மூலம் உரங்களை விற்பனை செய்தவுடன், இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். ஆய்வின் போது மேற்காணும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் உர விற்பனை யாளர்களின் விற்பனை உரிமம் உடனடியாக ரத்து செய்யப்பட்டு, குற்ற வழக்கு தொடரப்படும்.

விவசாயிகள் தாங்கள் உரம் வாங்கும் போது உர உரிமம் பெற்ற சில்லரை விற்பனையாளர்களிடம் ஆதார் அட்டையுடன் சென்று உரம் வாங்க வேண்டும். உரம் வாங்கும் பொழுது உரிய விற்பனைப் பட்டியல் கேட்டுப் பெறவும். உர மூட்டையின் மேல் அச்சிடப்பட்ட அதிகபட்ச விற்பனை விலைக்கு மேல் விற்பனை செய்யப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப் பட்டுள்ளது.

இது குறித்த புகார்கள் இருப்பின் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கோ அல்லது வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கோ தொடர்பு கொண்டு புகார் அளிக்கவும்.

எனவே திருச்சிராப்பள்ளி மாவட்ட உர விற்பனையாளர்கள் உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985 மற்றும் உர நுகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகியவற்றை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா தெரிவித்து உள்ளார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாய உணவு பொருள் கலப்படம் கண்டறிதல் பற்றி எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, மார்ச் 18

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்) தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் பொது மக்கள் மற்றும் விவசாயிகளிடம் உணவு பொருள் கலப்படம் பற்றி கூறினர்.



விவசாய உணவுப் பொருட்களில் அதிக லாபம் ஈட்டுவதற்காகத் தரம் குறைந்த அல்லது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்களைச் சேர்ப்பது உணவுக் கலப்படம் (Food Adulteration) எனப்படுகிறது.

**பால் :** தண்ணீர், சோப்புத் தூள், யூரியா, ஸ்டார்ச் மற்றும் சோயா பால் ஆகியவை கலக்கப்படுகின்றன.

**மசாலாப் பொருட்கள்**

**மிளகாய்த் தூள் :** செங்கல் பொடி அல்லது மரத்தூள்.

**மிளகு :** பப்பாளி விதைகள்.

**மஞ்சள் தூள் :** மெட்டானில் மஞ்சள் (Metanil Yellow) போன்ற வேதிச்சாயங்கள்.

**உணவு தானியங்கள் :** அரிசி மற்றும் பருப்பு வகைகளில் கல், மண், மற்றும் பிளாஸ்டிக் துண்டுகள் கலக்கப்படுகின்றன.

இதனை கண்டறியும் முறைகள் பற்றி செய்முறை விளக்கம் அளித்தனர்.

# தொட்டியம் கிராமத்தில் கிராமத் தங்கல் திட்ட (RAWE) தொடக்க விழா!



திருச்சி, மார்ச் 18

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் வட்டம், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண் புலத்தைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவர்களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE), தொட்டியம் பகுதியில் மிகச் சிறப்பாகத் தொடங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண் புல முதல்வர் தலைமை தாங்கி, மாணவர்களின் களப்பணியை முறைப்படி தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினராக தொட்டியம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (ADA) கலந்து கொண்டு சிறப்பித்தார். இவர்களுடன் அப்பகுதியைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் மற்றும் வேளாண் ஆர்வலர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

**தொழில்நுட்ப விழிப்புணர்வு :** மாணவர்கள் தாங்கள் கற்ற நவீன வேளாண் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எளிமையாக விளக்கினர். குறிப்பாக, தொட்டியம் பகுதியில் பயிரிடப்படும் முக்கிய பயிர் களுக்கான சொட்டுநீர் பாசனம், இயற்கை உர மேலாண்மை மற்றும் மண் வள பாதுகாப்பு குறித்து செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

**அதிகாரிகளின் அறிவுரை :** வேளாண் உதவி இயக்குனர் (ADA) பேசுகையில், அரசின் பல்வேறு மானியத் திட்டங்கள், பயிர் காப்பீடு மற்றும் 'உழவன் செயலி'யை மாணவர்கள் உதவியுடன் விவசாயிகள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று விளக்கினார்.

பல்கலைக்கழக முதல்வர் பேசுகையில், 'மாணவர்கள் வகுப் பறையில் கற்றதை விவசாயிகளின் அனுபவத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களுக்குப் பயன்படும் வகையில் புதிய தீர்வுகளை வழங்க வேண்டும்' என்று மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

# ஒருங்கிணைந்த பண்ணை மாதிரி திடல் பகுதியை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்





திருச்சி, மார்ச் 18

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலை கழகத்தை சேர்ந்த வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் கிராமப்புற விவசாய பணி அனுபவத் திட்டத்தினை (RAWE) ஸ்ரீரங்கம் வட்டம் அந்தநல்லூர் பகுதியில் தங்கி மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஒரு அங்கமாக மாணவர்கள் அரிஞ்சய சோழன், பாலாஜி, ஆறுமுகசாமி, ஆகாஷ்.பா, ஆகாஷ்.எம், அதிஷ் மற்றும் குரு பிரசாத், குமாரமங்கலம் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த பண்ணை மாதிரி திடல் பகுதியை நேரடியாகச் சென்று பார்வையிட்டு அதன் பயன்களை தெரிந்துக் கொண்டனர்.

இப்பகுதியில் 20 ஆண்டுகளுக்கு முன் உருவி குளம் உருவாக்கப்பட்டு அதில் மீன்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும் அதன் அருகிலேயே 12 ஆண்டுகளுக்கு முன் வீடு கட்டப்பட்டுள்ளது. அங்கு நாட்டுக்கோழி, மாடுகள், மீன்கள், பல்வேறு வகையான நெற்பயிர்கள் மற்றும் உடல் வலிமை மற்றும் ஆரோக்கியம் அளிக்கக்கூடிய சிறப்பு வாய்ந்த சம்பா முக்கியமாக விளைவிக்கப்படுகிறது.

இதன் முக்கியமான சிறப்பு என்னவென்றால் நாட்டுக்கோழிகள் வளர்க்கப்பட்டு அதன் கழிவுகள் வீணாவதை மீன்களுக்கு உணவாக அளிக்கப்படுகிறது. நெல்வயல்களில் கழிவுகளான வைக்கோல் மாட்டுபண்ணைக்கு அனுப்பப்படுகிறது. மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டு அருகிலுள்ள பெட்டவாயித்தலையில் விற்பனைச் செய்யப்படுகிறது.

மறுசுழற்சி முறை கழிவுகள் வீணாகமல் பாதுகாப்பான முறையில் மறுசுழற்சி செய்து பயன்படுத்துவது சிறப்பு. இவை மாணவர்களின் கற்றலுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நேரடி அனுபவம் ஆகும்.



# புத்தாக்க நிறுவனங்கள் மேம்படுத்த என்ன வழி?

புத்தாக்க நிறுவனங்கள் ஒரு புதுமையான கண்டுபிடிப்பை நவீன தொழில்நுட்பத்தின் துணையோடு பொருளாகவோ, சேவையாகவோ முன்வைக்கின்றன.

அமோசான், நெட்ஃபிளிக்ஸ், ஊபர், ஃபிளிப் கார்ட் போன்றவை புத்தாக்க நிறுவனங்கள் (START AP) யாக தொடங்கப்பட்டவை தான்.

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட புத்தாக்க நிறுவனங்களில் 21 லட்சம் வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன.

ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் சேவைகள் தவிர்க்க முடியாத தாகிவிட்ட இன்றைய சூழலில், கடந்த ஆண்டு மட்டும் 9500 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. புத்தாக்க தொழிலுக்கு உகந்த களமாக உள்ள நமது இந்தியாவில் இத்தகைய இழப்புகள் நீடிக்கக்கூடாது.

**ஏன் இத்தகைய சூழ்நிலை, உருவாக காரணம் என்ன?**

புத்தாக்க துறை என்பது புதுமையான நோக்கங்களோடு வரும் தொழில் முனைவோருக்கு வெற்றி தோல்வியை இயல்பாக கருதும் முதலீட்டாளர்கள் கை கோர்க்கும் களமாகும். தோல்வி என்பது வெற்றிக்கான பயணத்தில் ஒரு படிக்கட்டாகவே இங்கு கருதப்பட்டாலும் அனைவராலும் மீண்டு வர முடியும் என எதிர்பார்க்க முடியாது.

புத்தாக்க துறையில் சீரிய சுய விமர்சனங்கள் நிகழ்த்தப் பட்டாக வேண்டிய தேவையையும் மறுப்பதற்கும் இல்லை. எடுத்துக்காட்டாக மருந்து தொடங்கி மளிகை பொருட்கள் வரை வினியோகித்து, வந்த ‘டன்சோ‘ நிறுவனம் அகலக்கால் வைத்ததே கடந்த ஆண்டு இது மூடப்படக் காரணமானதாக விமர்சிக்கபடுகிறது.

## புத்தாக்க தொழில் தொடங்கிட அரசு என்ன செய்கிறது?

புத்தாக்க தொழிலைத் தொடங்குவோருக்கு வழிகாட்டவும் நிதியுதவி செய்யவும் 2016யிலே மத்திய அரசு ‘ஸ்டார்ட் அப் இந்தியா‘ என்ற அமைப்பு புத்தாக்க நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப 3 தவணைகளில் (கட்டங்களில்) நிதியுதவி அளித்து வருகிறது.

அண்மையில் மத்திய அரசு ஸ்டார்ட் அப் 2.0 என்கிற பெயரில் புத்தாக்க நிறுவனங்களுக்கு 10 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடக்க நிலை நிறுவனங்களுக்கும் தீவிர தொழில்நுட்ப சேவைகளுக்கும் இந்த ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வளவு செயல்பாடுகளும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வழங்கி கூடுதலான வெற்றி ஈட்டும் என மனதார எதிர்பார்க்கிறது அரசு.

மத்திய, மாநில அரசுகள் புத்தாக்க துறையில் சில வழிகாட்டலையும் ஒழுங்குமுறைகளை கையாண்டால் இந்த துறையில் நிலவும் சீரற்ற தன்மையை சரி செய்ய முடியும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதியில் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள்

காவிரி டெல்டா பகுதி தமிழ்நாட்டின் “நெற்க்கின்னம்” என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதி நீர்வளம், செழிப்பான நிலம், மற்றும் பாரம்பரிய விவசாய அறிவு ஆகியவற்றால் புகழ் பெற்றது. ஆனால், சமீபத்திய காலங்களில் நீர் பற்றாக்குறை, நிலச்சரிவு, செலவு உயர்வு, மற்றும் விளைச்சல் குறைவு போன்ற சவால்கள் உருவாகியுள்ளன. இந்நிலையில், ஒருங்கிணைந்த பன்னைய முறை ஒரு நிலையான தீர்வாகத் திகழ்கிறது. இது நிலம், நீர், கால்நடை, மீன்வளம், மரக்கன்றுகள், பசுமை உரம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து உயர் உற்பத்தி மற்றும் வருமானத்தை உருவாக்கும் முறையாகும்.

**காவிரி டெல்டா பகுதியின் நில அமைப்பு மற்றும் விவசாய சூழல்**

- காவிரி, கொள்ளிடம், மணிமுத்தாறு, வலங்கை நதிகள் இப்பகுதிக்கு நீர் வழங்குகின்றன.
- **முக்கிய மாவட்டங்கள் :** திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர்.
- **நில வகைகள் :** கரிசல் நிலம், மணல் கலந்த சிதைவு மண், வளமான அலுவியல் மண்.
- **முக்கிய பயிர்கள் :** நெல், கரும்பு, பசுந்தாணியம், பசலைக் கீரை, வாழை, காய்கறிகள்.
- இப்பகுதி தண்ணீரை அடிப்படையாகக் கொண்ட நீர் நில விளைச்சல் மண்டலம் என்பதால் ஒருங்கிணைந்த பண்ணையம் இங்கு அதிகம் பொருந்தக்கூடியது.

**ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியக் கருத்து**

ஒருங்கிணைந்த பண்ணையம் என்பது “ஒரே நிலத்தில் பல்வேறு விவசாய மற்றும் பாசனத் துறைகளை இணைத்து, இயற்கை வளங்களின் சிறந்த பயனீடு மூலம் அதிக வருமானம் மற்றும் நிலைத்தன்மை பெறும் முறை”.

**இதன் நோக்கம்**

- விவசாயியின் பொருளாதார நிலை உயர்த்துதல்
- நிலம் மற்றும் நீரின் திறமையான பயன்பாடு
- பசுமை ஆற்றல் மற்றும் உயிர் வளங்களின் பாதுகாப்பு
- சுற்றுச்சூழல் சமநிலை பேணுதல்

**காவிரி டெல்டா பகுதியில் நடைமுறையில் உள்ள ஒருங் கிணைந்த பண்ணைய வகைகள்**

**1. நெல் + மீன் வளர்ப்பு முறை**

- நெல் வயலில் நீரை நிரப்பி அதில் கார்ப்ப், மிர்கால் போன்ற மீன்களை வளர்ப்பது.
- நெல் வயல் பூச்சிகள் குறைகின்றன.
- மீன் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கிறது.
- இயற்கை உரமாக மீன் கழிவுகள் பயன்படுகின்றன.

**2. நெல் + வாத்து வளர்ப்பு**

- வாத்துகள் பாசனநீரில் பூச்சிகளைத் தின்று வயலின் உயிர்ச்சூழலை சமநிலைப் படுத்துகின்றன.
- வாத்து முட்டை மற்றும் இறைச்சி வருமானம்.
- பூச்சிக்கொல்லிகள் தேவையில்லை.

**3. நெல் + மாடு / ஆடு வளர்ப்பு**

- மாடுகளின் சாணம் மற்றும் சிறுநீர் இயற்கை உரமாகப் பயன்படுகிறது.
- பால் மற்றும் பசும்பால் பொருட்கள் மூலம் வருமானம்.
- நெல் வைக்கோல் கால்நடைகளுக்குப் போாக்கு.

**4. மீன் + இறால் + நண்டு ஒருங்கிணைந்த அக்வாகல்ச்சர்**

- கடலோர பகுதிகளில் உப்பு நீர் குளங்களில் ஒருங்கிணைந்த வளர்ப்பு.
- உற்பத்தி சீராகவும் லாபம் அதிகமாகவும் கிடைக்கிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**5. விவசாயம் + தோட்டக்கலை + மரவளர் ஒருங்கிணைந்த பண்ணையம்**

● நெல் / கரும்பு / திணை + மரக்கன்றுகள் (மாவு, வேம்பு, சிட்டுக்காடு)

● நீண்டகால வருமானம் மற்றும் நிலத்தின் ஆரோக்கியம் பேணப்படுகிறது.

**பொருளாதார நன்மைகள்**

● ஒருங்கிணைந்த பண்ணையம் இரட்டிப்பு வருமானம் தரும் திறன் கொண்டது.

● ஒரு ஏக்கரில் வருடாந்திர வருமானம் ரூ. 1.5 லட்சம் வரை உயரும்.

● தொழிலாளர் தேவை அதிகரிப்பதால் கிராமப்புற வேலை வாய்ப்பு உருவாகிறது.

● பொருளாதார அபாயம் குறைகிறது (ஒரு துறை தோல்வி யடைந்தாலும் மற்ற துறைகள் ஆதரிக்கின்றன).

● குடும்ப அடிப்படையில் நிலைத்த வாழ்க்கை முறையை உருவாக்குகிறது.

**சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தன்மை**

● ஒருங்கிணைந்த பண்ணையம் சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்கும் பசுமை முறை ஆகும்.

● வேதிப்பொருட்களின் பயன்பாடு குறைவு.

● இயற்கை உரங்கள், கம்போஸ்ட், பசுந்தை பயன்பாடு.

● நிலத்தின் உயிர்ச்சத்து அதிகரிப்பு.

● நீர் சேமிப்பு மற்றும் நிலத்தடி நீர் புதுப்பிப்பு.



**அரசு திட்டங்கள் மற்றும் ஆதரவுகள்**

● தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு பல திட்டங்கள் மூலம் IFSஐ ஊக்குவிக்கின்றன :

● NMSA (National Mission on Sustainable Agriculture)

● RKVY (Rashtriya Krishi Vikas Yojana)

● TNIAMWARM Project

● விவசாயிகள் பயிற்சி மையங்கள் (KVKs) வழியாக ஒருங்கிணைந்த பண்ணையப் பயிற்சிகள்.

**சவால்கள் மற்றும் தீர்வுகள்**

● நீர் பற்றாக்குறை

● தொழில்நுட்ப அறிவு குறைவு

● சந்தை அணுகல் சிரமம்

● சிறு நிலக்காரர்கள் முதலீடு குறைவு

● தண்ணீர் சேமிப்பு தொழில்நுட்பங்கள் (drip, sprinkler)

● பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்

● கூட்டுறவு சந்தைப்படுத்தல் மையங்கள்

● அரசு நிதி உதவி மற்றும் கடன் வசதிகள்

காவிரி டெல்டா பகுதி தமிழ்நாட்டின் உணவு வளத்தின் மையமாக இருந்தாலும், சீரான நீர் ஆதாரம் மற்றும் நிலத் தன்மை சவாலாகியுள்ளது.

இந்நிலையில் ஒருங்கிணைந்த பண்ணைய முறை சிறந்த மாற்று வழியாக விளங்குகிறது. இது விவசாயியின் பொருளா தாரத்தை மட்டுமல்ல, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. "ஒரு நிலத்தில் பல வாழ்க்கைகள் - ஒரு விவசாயத்தில் பல வாய்ப்புகள்" என்பதே ஒருங்கிணைந்த பண்ணையத்தின் சாரம். இதன் பரவலான நடைமுறைகள் காவிரி டெல்டா பகுதியை மீண்டும் வளமான மற்றும் நிலையான பசுமை மண்டலமாக மாற்றும் திறன் கொண்டது.

தகவல் : ***வெங்கடேஷ் ம, நிவேதா,ஆ.ல. உதவிப் பேராசிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# கோடைகாலத்தில் மாடுகளில் உண்ணிகளால் ஏற்படும் பாதிப்புகள்

கோடை காலங்களில் உண்டாகும் வெப்பமான சீதோசண நிலை காரணமாக உண்ணிகள் அதிக அளவில் பெருகுவதால் அதன் மூலம் மாடுகளுக்கு ஏற்படும் நோய்களும் அதிக அளவில் காணப்படுகின்றன. மரங்கள், செடிகள் அதிகம் உள்ள இடங்களில் உண்ணிகள் அதிகம் காணப்படும். மாடுகளில் காதுகளின் உட்புறம், கழுத்து, வால், மடிப்பகுதி மற்றும் கால் இடுக்குகளில் காணப்படும். அதிக அளவு உண்ணிகள் மாடுகளின் உடம்பில் இருந்தால் உடம்பின் தோல் பகுதியில் நமைச்சலை ஏற்படுத்தி மாடுகள் சரிவர தீவனத்தை உண்ணாமல் போவதால் உடல் இளைப்பதுடன் கறவை மாடுகளில் பால் உற்பத்தியும், வேலை மாடுகளில் வேலைத் திறனும் குறையும். சில சமயங்களில் உண்ணிகள் அதிக அளவு இரத்தத்தை உறிஞ்சுவதால் இரத்தச் சோகை ஏற்பட்டு மாடுகள் இறப்பதற்கும் வாய்ப்புள்ளது. மேலும் உண்ணிகள் இரத்தத்தை உறிஞ்சுவது மட்டுமின்றி சில வகை நோய் கிருமிகளையும் உடலுக்குள் செலுத்தி உண்ணிக் காய்ச்சல், பித்தப்பை நோய், இரத்த நீர்க்காய்ச்சல் போன்ற நோய்களை ஏற்படுத்தி அதிக பொருளாதார சேதத்தை உண்டுபண்ணுகின்றன.

## உண்ணிக் காய்ச்சல்

கலப்பின மாடுகளை உண்ணிகள் கடிக்கும் பொழுது “தைலீரியா” என்ற ஓர் அணுக் கிருமிகள் நிணநீர்ச் சுரப்பிக்குள் சென்று வளர்ச்சி அடைந்து நிணநீர் மண்டலத்தையும் இரத்தச் சிவப்பு அணுக்களையும் பாதித்து உண்ணிக் காய்ச்சல் நோயை ஏற்படுத்துகின்றன. பாதிக்கப்பட்ட மாடுகளில் காய்ச்சல், சோர்வு, தீவனம் உட்கொள்ளாமை, மூக்கு வாயிலிருந்து நீர் வழிதல், மூச்சு இறைப்பு, நிணநீர்ச்சுரப்பி வீக்கம், இரத்தச் சோகை, எடை குறைதல் மற்றும் கழிச்சலுடன் மாடு எலும்பும் தோலுமாகக் காணப்படும். இறுதியில் மாடு எழுந்திருக்க இயலாது படுத்து விடும். மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாடுகள் 3 முதல் 4 நாட்களுக்குள் இறந்து விடும். மாடுகளில் இரத்தத்தைப் பரிசோதனை செய்வதன் மூலம் இந்நோயைக் கண்டறிந்து கால்நடை மருத்துவர் மூலம் சிகிச்சை அளிக்கலாம்.

## இரத்த நீர்க்காய்ச்சல்

இதுவும் உண்ணிகளால் உண்டாகும் நோயாகும். உண்ணிகள் இரத்தத்தை உறிஞ்சும் பொழுது “பெபிசியா” என்ற கிருமியை இரத்தத்தினுள் செலுத்தி சிவப்பு அணுக்களை அழித்து விடுகின்றன. பாதிக்கப்பட்ட மாடுகளில் காய்ச்சல் அதிகமாக இருக்கும். தீவனம் எடுக்காது. அசை போடாது. பலவீனமாகவும் இருக்கும். கண்கள் ஆரம்பத்தில் சிவந்து பின்னர் வெளிறிப் போய் இருக்கும். கிருமிகளால் இரத்த அணுக்கள் அழிவதால் இரத்த சோகை ஏற்பட்டு பிறகு மஞ்சள் காமாலை ஏற்படும். மாட்டின் சிறுநீர் காபி நிறத்தில் இருக்கும். சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படும். பாதிக்கப்பட்ட மாடுகளின் இரத்தத்தைப் பரிசோதனை செய்வதன் மூலம் இந்நோயைக் கண்டறியலாம். பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு உடனடியாக சரியான மருந்து கொண்டு சிகிச்சை அளித்துக் குணப்படுத்தலாம்.

## பித்தப்பை நோய்

உண்ணிகள் மற்றும் சில பூச்சிகள் மூலமாக மாடுகளில் இந்நோய் பரவுகிறது. உண்ணிகள் கடிக்கும் பொழுது “அனபிளாஸ்மா” என்ற கிருமிகள் இரத்தத்தினுள் சென்று சிகப்பு அணுக்களை அழிக்கின்றன. மூன்று நான்கு வாரங்களுக்குள் நோயின் அறிகுறிகள் தென்படும். காய்ச்சல் 40 டிகிரி சென்டி கிஹிடுக்கு மேல் இரண்டு வாரம் வரை இருக்கும். பாதிக்கப்பட்ட மாடுகள் சரிவர தீவனம் உட்கொள்ளாது. மாடுகள் இளைத்து எலும்பும் தோலுமாக இருக்கும். மிகவும் பாதிக்கப்பட்ட மாடு களில் மூச்சுத் திணறல் ஏற்படும். சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படும். பாதிக்கப்பட்ட மாடுகளின் இரத்தத்தைப் பரிசோதனை செய்வதன் மூலம் நோயைக் கண்டறியலாம். பாதிக்கப்பட்ட மாடு களுக்கு கால்நடை மருத்துவரின் உதவியுடன் டெட்ராசைக்ளின் ஊசி போடுவதன் மூலம் இந்நோயைக் குணப்படுத்தலாம்.



## உண்ணிகளைத் தடுக்கும் முறைகள்

1. தகுந்த உண்ணி நீக்கி மருந்துகளில் (அசன்டால், மாலத்தியான். சுமித்தியான், புயுடாக்ஸ்) ஏதாவது ஒன்றை கால்நடை மருத்துவரின் உதவியுடன் குறிப்பிட்ட விழுக்காடு நீரில் கலந்து மாடுகளைக் குளிப்பாட்ட வேண்டும்.

2. உண்ணி நீக்க மருந்துகளை மாடுகள் அடைக்கும் கொட்டகைகளில் உட்புறம், சுவர் மற்றும் தொழுவத்தின் தரைகளிலும் இரு மடங்கு அடத்தியுள்ள உண்ணி நீக்கி மருந்துகளைத் தெளித்து அங்குள்ள உண்ணிகளை ஒழித்தால் தான் அவைகளின் மறுதாக்குதலைத் தவிர்க்கலாம். தேவைக்கேற்ப உண்ணி நீக்க மருந்துகளை மாதம் ஒரு முறை தொடர்ந்து உபயோகித்தால் உண்ணித் தொல்லையை அறவே ஒழிக்கலாம்.

3. கொட்டகைகளில் தரை, உட்புறம். மேற்புறத்தில் ஓட்டைகள் இருந்தால் அவற்றை அடைத்து உண்ணிகள் அங்குத் தங்கிப் பெருக வாய்ப்பில்லாமல் செய்வது அவற்றை ஒழிக்கப் பெரிதும் உதவியாக இருக்கும்.

4. மாடுகளை ஒரே இடத்தில் மேய விடாமல் மாற்றி மாற்றி மேய்ப்பதன் மூலம் உண்ணிகளைத் தடுக்கலாம்.

5. உண்ணி நீக்கி மருந்துகள் நச்சுத் தன்மை கொண்டவை யாதலால் அவை உடற்புண், தீவனம் மற்றும் நீரில் படாமலும் மாடுகள் நக்காமலும் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியம். உபயோகிப்பவரும் தக்க முன்னெச்சரிக்கையாக கையுறை அணிந்து கொள்ள வேண்டும்.

6. சும அளவு தேங்காய் எண்ணெய் மற்றும் வேப்ப எண்ணெயை ஒரு நாள் விட்டு ஒருநாள் மாடுகளின் உடம்பில் தடவுவதன் மூலம் எளிய முறையில் மாடுகளில் உண்ணிகள் பாதிப்பை தடுக்க முடியும்.

தகவல் : *டாக்டர். இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம். திருப்பரங்குன்றம். மதுரை 625 005.*

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333